**புத்தளம் நகர சபை**

**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 12 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தளம் நகர சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த புதிய கருவாட்டு விற்பனைக் கூடத்தின் பெறுமதியான ரூபா 846,698 நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் மாதம் செலுத்தப்பட வேண்டிய சம்பளத்தொகையான ரூபா 1,947,510 உள்ளடங்கலாக ரூபா 4,274,898 தொகை நிலுவைச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய சேமிப்பு வங்கியில் பேணிவரப்பட்டிருந்த இரு சேமிப்புக் கணக்குகளுக்குரித்தான வருடாந்த வட்டித்தொகை கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காக ஓய்வூதியச் சம்பளப் பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையான ரூபா 398,357 செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதியச் சம்பளமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆண்டின் போது பல்வேறு அரச நிறுவகங்களிடமிருந்து பெறவேண்டியதாகக் காணப்பட்ட மூலதன மானியத்தின் பெறுமதியான ரூபா 4,532,779 தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டிற்காக முன்னைய ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத் தொகையான ரூபா 54,640 ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிராமையால் ஆண்டின் மிகை குறைவாகவும், முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானக் கணக்கு அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) ரூபா 53,000 பெறுமதியான உழவு இயந்திரம் பழுதுபார்த்தல் உதிரிப்பாகங்களின் கொள்வனவிற்காக ஏற்கப்பட்ட செலவினம் நடைமுறைச் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியால் நடைமுறைச் சொத்துக்கள் அதிகரித்தும், ஆண்டிற்கான செலவினம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) பக்கோ இயந்திரத்திற்காக ஏற்கப்பட்ட ரூபா 66,500 தொகையான செலவினம் முதலீடாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியால் ஆண்டிற்கான செலவினம் குறைத்தும் நடைமுறைச் சொத்து அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) தேசிய சேமிப்பு வங்கியில் பேணிவரப்பட்டிருந்த இரு சேமிப்புக் கணக்குகளுக்குரித்தான வருடாந்த வட்டித்தொகையான ரூபா 9,447 கணக்கீடு செய்யப்பட்டிராமையால் அப் பெறுமதியால் ஆண்டிற்கான வருமானமும் உரிய வங்கிக் கணக்கு மீதியும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) ஆண்டின் வீத வரியின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,339,311 தொகையான தண்டப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிராமையால் அப் பெறுமதியால் ஆண்டிற்கான வருமானமும் பெறவேண்டிய வீத வரியும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஓ) வங்கி நடைமுறைக்கணக்குகள் இரண்டிற்கிடையே மாற்றப்பட்ட ரூபா 950,000 தொகையும் ரூபா 360 தொகையும் முற்பணக் கொடுப்பனவொன்று முன்னர் பெற்ற வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிராமையால் அக் கணக்கு ரூபா 950,360 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) 2012 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்காக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரித் தொகையான ரூபா 884,643 இற்காக அவ்வாண்டின் போது ஒதுக்கம் செய்யப்பட்டிராத போதிலும் அத் தொகை மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் அக் கணக்கு ரூபா 884,643 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) 2012 திசெம்பர் மாதத்திற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித்தொகையான ரூபா 49,242 செலுத்தப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், முன்னைய ஆண்டின் போது செலுத்தப்பட

வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கணக்கிற்குச் செலுத்தப்பட வேண்டிய பெறுமதியாக அப் பெறுமதி எடுக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 49,242 தொகையால் நடைமுறைப் பொறுப்பு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் படி, 09 கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 154,041,692 தொகையானதுடன் பட்டோலையின் படி உரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 122,538,652 ஆனமையால் ரூபா 42,772,670 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதியொன்று காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

பல வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்த 03 தொங்கல் கணக்குகளின் வரவு மற்றும் செலவு மீதிகள், முன்னைய ஆண்டுகளின் போது ஒன்றுடனொன்று சீராக்கப்பட்டு ரூபா 175,949 தொகையான ஒரு வரவு மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம் மீதி நடைமுறைச் சொத்துக்களின் கீழ் சபையால் மேற்கொள்ளப்பட்ட வைப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் தொடர்ந்தும் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 122,802,484 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ஒரு வருட கால எல்லை கடந்த மீதிகளின் பெறுமதி ரூபா 107,153,354 ஆகக் காணப்பட்டது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 73,923,885 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ஒரு வருடத்திற்கும் மேலாக தீர்க்கப்படாதிருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 57,665,039 ஆகக் காணப்பட்டது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 107,299,033 தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 அறவிடுவதற்கிருந்த ஊழியர் கடன்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் பெறுமதி ரூபா 1,899,436 ஆகக் காணப்பட்டதுடன் இதில் இறந்த, ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச்சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 80 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் பெறுமதி ரூபா

183,036 ஆகக் காணப்பட்டது. இக் கடன் மீதி 10 ஆண்டுகளுக்கு மேலான காலமாக அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டதுடன் இக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக நகர சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,402,624 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,804,547 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 16,536 | 4,538 | 53,929 |
| (ii) | வாடகை | 29,862 | 28,681 | 22,153 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,185 | 822 | 3,564 |
| (iv) | ஏனைய வருமானம் | 15,550 | 18,451 | (2,584) |

#### 2.2.2 நிலுவையான வருமானம்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் 4 வருமான விடயங்களின் திரண்ட நிலுவையினதும் மதிப்பிடப்பட்ட வருமானத்தினதும் கூட்டுத்தொகை ரூபா 183,085,000 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 52,492,000 ஆகக் காணப்பட்டமையால் வருமானத்தைச் சேகரிக்கும் செயலாற்றல் 29 சதவீதமான குறைந்த தரத்தில் நிலவியது.

#### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய முத்திரைக்கட்டணப் பெறுமதி ரூபா 919,000 ஆகக் காணப்பட்டது. இது 2013 ஆம் ஆண்டின் யூலை முதல் திசெம்பர் மாதம் வரையான மதிப்பிடப்பட்ட வருமானமாகக் காணப்பட்டது.

**2.4 மிகைக்கட்டணம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 2004 யூன் 30 ஆம் திகதி தலைவருக்கும் செயலாளருக்கும் விதிக்கப்பட்டிருந்த ரூபா 124,800 தொகையான மிகைக்கட்டணத்திற்காக தலைவரின் சார் படிப்பணத்தில் மாதாந்தம் ரூபா 3,500 படி அறவிடப்பட்டிருந்ததுடன் மீயாய்வாண்டின் இறுதியிலும் அவ் அறவீடுகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை.

(ஆ) சபையால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மிகைக்கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 360,150 தொடர்பாக சபையின் அதிகாரத் தரப்பினருக்கு எதிராக எதிர்காலத்தில் மிகைக்கட்டண நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

ஆண்டிற்கான வீத வரி பட்டியலிடல் ரூபா 16,536,296 தொகையானதுடன் மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் முன்னைய ஆண்டுகளின் போது முன்கொண்டுவரப்பட்ட மற்றும் நிலுவைத் தொகை ரூபா 62,664,824 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது பட்டியலிடப்பட்ட வீத வரியில் ரூபா 4,537,925 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவைத் தொகையில் அறவிடக்கூடியதாகக் காணப்பட்ட வருமானம் ரூபா 5,730,469 ஆகக் காணப்பட்டது. இதன் படி, பட்டியலிடப்பட்ட வருமான அறவீட்டின் முன்னேற்றம் 27 சதவீதமாகக் காணப்பட்டதுடன் நிலுவைத் தொகையில் அறவிடப்பட்ட வருமானத்தின் முன்னேற்றம் கருத்திற்கொள்ளப்படுகையில் 10 சதவீத அளவாகக் காணப்பட்டது.

**2.6 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

நீண்ட காலக் கடன் தவணை நிலுவையாகக் காணப்படல்

சபையால் 2003 ஆம் 2004 ஆம் ஆண்டுகளின் போது பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகைக்காக தவணைப்பணமும் வட்டியும் முறைப்படி செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,217,429 தொகையான கடன் தவணைப்பணம் நிலுவையாகக் காணப்பட்டது.

**2.7 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

சபைக்குரித்தாகக் காணப்பட்ட ரூபா 250,000 பெறுமதியான HCM 99 ஆம் இலக்க கைஉழவு இயந்திரம் 13 ஆண்டு காலமாகவும், ரூபா 2,104,397 பெறுமதியான தீயணைப்பு இயந்திரம் இரண்டாண்டு காலமாகவும் ரூபா 65,000 பெறுமதியான நீர் இயந்திரம் 5 ஆண்டுகாலத்திற்கு மேலான காலமாகவும் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

**2.8 இனங்காணப்பட்ட இழப்புகளும் நட்டங்களும்**

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1985 ஆம் ஆண்டு முதல் 1996 வரையான கால எல்லைக்குள் சபை ஊழியர் ஒருவருக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையைச் செலுத்தத் தவறியமையால் விதிக்கப்பட்டிருந்த மிகைக்கட்டணத் தொகையான ரூபா 14,935 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2001 ஆம் 2007 ஆம் ஆண்டு வரையான கால எல்லைக்குள் பல்வேறு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 544,838 தொகையான 18 முற்பண மீதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் அப் பெறுமதி சபை நிதியத்திற்கு நட்டமாகக் காணப்பட்டது.

**2.9 ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மிகைக்கட்டணம்**

------------------------------------------------------------------------

1981 மார்ச் மாதம் முதல் 1999 திசெம்பர் வரையான காலப்பகுதியின் போது சபை ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டு ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிராமையால் இதற்காக ரூபா 343,215 தொகையான மிகைக்கட்டணம் சபையால் 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது தவணை அடிப்படையில் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக எனது என்டபிள்யூ/பீரீ/ஏ/03/புத்.ந.ச/2011/46 ஆம் இலக்க ஐயவினாவின் மூலம் இந் நட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு அறிக்கையிடுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பதில்கள் வழங்கப்படுவதற்கு சபை தவறியிருந்தது.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

----------------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) சொத்து முகாமைத்துவம்